செ.வெ.எண்:07 நாள்:06.11.2020

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் இன்று (06.11.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

“நாகப்பட்டினம் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 1475.55 மி.மீ. ஜனவரி 2020 முதல் அக்டோபர் 2020 வரை பெய்த சராசரி மழையளவு 26.17 மி.மீ. ஜனவரி 2020 மாதத்தில் மட்டும் பெய்த சராசரி மழையளவு 26.17 மி.மீ ஆகும்.

05.11.2020 அன்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 97.28 அடியாக இருந்தது. நீர்வரத்து 5220 கனஅடியாக இருந்தது. 2020-21 ஆண்டு நெல் சாகுபடி செய்திட 172000 ஹெக்டேர் இலக்கு பெறப்பட்டு இது நாள்வரை 167214 ஹெக்டேர் சாதனை அடையப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2020-21-ம் ஆண்டிற்கு நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறுவகை பயிர்கள் 260400 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளவும் இதன் மூலம் 7.978 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 167383 ஹெக்டேர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டு ஒத்திசைவு முடிக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரங்கள் யூரியா 5539 மெ.டன் டி.ஏ.பி 2355 மெ.டன், பொட்டாஷ்- 1600 மெ.டன், காம்ப்ளக்ஸ் 1481 மெ.டன் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் மற்றும் தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பூச்சி மற்றும் நோய் திரவ மருந்துகள் 4870 லிட்டர் மற்றும் குருளை நோய் மருந்துகள்; 3250 கிலோவும், தனியார் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரியின் கௌரவ நிதி உதவி திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அனைத்து தகுதியான விவசாயிகளுக்கு இடுபொருள் மற்றும் பிற தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆண்டிற்கு ரூ.6000/- நிதி உதவி அளித்து வருகிறது. பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதி திட்ட பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை (Kisan Credit Card) வழங்குவதற்கான சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மத்திய அரசாங்கத்தால் 14-02-2020 அன்று துவங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கௌரவ நிதித் திட்ட பயனாளிகள் (PM KISAN திட்டம்) மற்றும் தகுதி உள்ள அனைத்து விவசாயிகளும் தங்களின் சேமிப்பு கணக்கு உள்ள வங்கி கிளை மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை அணுகி உழவர் கடன் அட்டை பெற்று மானிய சலுகையுடன் வங்கி கடன் பெற்றுக்கொள்ளலாம். அது மட்டும் இன்றி உழவர் கடன் அட்டைதாரர்கள் கால்நடை மற்றும் மீன் பிடிப்பதற்கான பராமரிப்பு செலவுகளுக்கான பராமரிப்பு தொகையையும் கிஷான் கடன் அட்டை மூலம் பெற்றுக்கொள்ளலாம். PM KISAN பயனாளிகள் அனைவரும் KCC அட்டை பெறும் பொருட்டு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

2020-21 ஆம் நிதி ஆண்டில் கரும்பு, எண்ணெய்பனை மற்றும் தென்னை பயிர்களில் சொட்டுநீர் பாசனமும், இதர பயிர்களில் தெளிப்பு நீர் பாசனமும் மேற்கொள்ள 2000 ஹெக்டேர் பொருள் இலக்கு பெறப்பட்டு ரூ.5.17 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதுவரை 2812 விவசாயிகளுக்கு 3252 ஹெக்டேர் பரப்பிற்கு இணையதள பதிவேற்றம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி அலுவலர்கள் அல்லது வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி தேவைப்படும் சிறு/குறு விவசாயிகள்

ஆவணங்களை வழங்கி தங்களது பெயரை முன்கூட்டியே பதிவு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இச்செயலி மூலம் வேளாண்மைத்துறை மானியத் திட்டங்கள், பயனாளிகள் முன்பதிவு, பயிர் காப்பீடு விபரம், உரம் மற்றும் விதை இருப்பு விபரம், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் விபரம், விளை பொருட்கள் சந்தை விலை நிலவரம், வானிலை முன்னறிவிப்பு பற்றிய செய்திகள், தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்கள் வருகை விபரம் ஆகிய தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொண்டு பயன்பெற முடியும். இதுவரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் 26283 விவசாயிகள் இச்செயலியை பதிவிறக்கம் செய்துள்ளார்கள். அனைத்து விவசாயிகளும் உழவன் கைபேசி செயலியினை உடன் கூகுள் பதிவிறக்க செயலி மூலமாக தங்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைங்களுக்கு நேரில் தங்களது கைபேசியினைக் கொண்டு சென்று பதிவிறக்கம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விதை கிராம திட்டத்தின்கீழ் 2020-21ம் ஆண்டிற்கு நிதி இலக்கு ரூ.210 இலட்சம் பெறப்பட்டுள்ளது. நெல் விதை விநியோகம் கிலோ ஒன்றிற்கு ரூ.17.50 (அல்லது) 50 சத மானியத்தில் மேற்கொள்ள 1200 மெ.டன்; இலக்கு பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயறுவகை விதைகள் விநியோகம் கிலோ ஒன்றிற்கு ரூ.48.∴- (அல்லது) 50 சத மானியத்தில் மேற்கொள்ள130 மெ.டன் இலக்கு பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. விதை கிராமத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும்; கிராமத்தில் உள்ள விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை அணுகி மானியத்தில் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிரதம மந்திரியின் திருந்திய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு நிதி உதவி வழங்கி பாதுகாத்திட சம்பா ∴ தாளடி நெல் பயிரினை காப்பீடு செய்திடலாம். இதன்படி நடப்பாண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சம்பா ∴ தாளடி நெற்பயிருக்கு 507 வருவாய் கிராமங்கள் அறிவிக்கை (ஈடிவகைநென) செய்யப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்திட காப்பீட்டு நிறுவனமான, இ ப்கோ-டோக்யோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனம் (IFFCO-TOCKYO GENERAL INSURANCE PVT Ltd.) தெரிவு செய்யப்பட்டுள்ளது. எனவே பயிர் காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் பொது சேவை மையங்கள் (Common, Service Centre) மூலமாகவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வரும் பொழுது மறுக்காமல் உடன் பயிர் காப்பீடு செய்து தருமாறு அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும் கேட்டு கொள்ளப்படுகிறது.

சம்பா ∴ தாளடி பருவத்தில் நெல் பயிரிடும் விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்ய கடைசி நாள் 30.11.2020 ஆகும்.

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு வயது முதிர்வு ஓய்வு காலங்களிலும் விவசாயிகள் பலன் பெறும் வகையில் இத்திட்டம் மத்திய அரசால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 18 – 40 வயது வரை உள்ள அனைத்து விவசாயிகளும் பதிவு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்த விவசாயிகள் தங்கள் வயதுக்கு ஏற்ப மாத சந்தாவை செலுத்தி வந்தால் 60 வயதிற்கு பிறகு மாதம் ரூ.3000.∴- ஓய்வூதியமாக பெற்று பயன்பெறலாம். விவசாயிகள் தங்கள் வயது வரம்பு சான்றிதழ், ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றைக்கொண்டு தங்கள் அருகில் உள்ள இ-சேவை மையங்களில் பதிவு செய்து இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்." என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர்(வேளாண்மை)திரு.கல்யாணசுந்தரம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் திரு.சண்முகநாதன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு.கோ.நடராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**